**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.58/2014**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.13** |
| **Name** | **:** | திரு. ரமேஷ் |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.03.2024.**

முதல் விசாரணை -

( சாட்சி விபத்தில் காயமுற்றதால் சிகிச்சைக்கு பிறகு வார்த்தைகள் சரியாக வராததால், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியின் உதவியாளர் திரு. ஐயப்பன், முதல் நிலை காவலர் உதவியுடன் சாட்சியம் பதிவு செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. மேலும், சாட்சி தான் கைப்பட சி.டி. பைலை பார்த்து குறிப்பு எழுதியதை வைத்து சாட்சியம் அளிக்க வேண்டினார், அவர் கைப்பட எழுதியதை நீதிமன்றத்தில் காட்டினார். அவருடைய எழுத்துக்கள் சரியாக இல்லாததால், உதவியாளர் உதவியுடன் நீதிமன்ற வளாகத்தில் எழுதியதை வைத்து சாட்சியம் அளிக்க வேண்டினார், ஏன் சி.டி. பைலை வைத்து சாட்சி அளிக்க முடியாதா என்று கேட்டதற்கு

கைகளால் பஞு தூக்க முடியவில்லை எனவும், பேப்பர்களை திருப்ப முடியவில்லை எனவும் தெரிவித்தார்.சாட்சியின் நிலைமையும் அவ்வாறு தான் இருந்ததால், சாட்சியின் சாட்சியம் பதியப்படுகிறது).

நான் தற்போது காவல் துணை கண்காணிப்பாளராக, விழுப்புரம் மாவட்ட ஆவண காப்பகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.04.2012 அன்று பெரணமல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரக பணியிலிருந்த போது, 27.04.2012 அன்று காலை 8.00 மணிக்கு சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி தன் மகன் மதன்குமாரை, அமாவாசை மகன் மோகன் என்பவர் கொலை செய்துவிட்டதாக சொல்லி கொடுத்த புகாரைப் பெற்று பெரணமல்லூர் காவல் நிலைய குற்ற எண்.232/2012, சட்டப்பிரிவுகள் 379 மற்றும் 302 இ.த.ச.வின் கீழ் வழக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

அசல் முதல் தகவல் அறிக்கையை புகாருடன் ஜே.எம். கோர்ட்டிற்கு அனுப்பி காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன், சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. ( சாட்சி வார்த்தைகள் சொல்வதற்கு மிகவும் சிரமப்பட்டதால் தாங்களால் எழுதிக் கொடுக்க முடியுமா என்று சாட்சியிடம் நீதிமன்றம் கேட்டதற்கு, சாட்சி தன்னால் எழுத முடியும், ஆனால் எழுத்துக்கள் புரியும் அளவிற்கு எழுத்துக்கள வராது என்று சொன்னால் உதவியாளர் உதவியுடன் சாட்சியம் பதியப்படுகிறது).

சம்பவ இடமான தனகோட்டி நிலம் அருகில் தடய பொருட்களான

கருப்பு கயிறு, ரத்தம் தோய்ந்த மண், சாதாரண மண், ரத்தக் கறை படிந்த கல் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் அதே சாட்சிகள் முருகன் மற்றும் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ.12-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் மற்றொரு சம்பவ இடமும் இருப்பதால் அந்த இடத்திற்கும் சென்றேன். அங்கு பிரேதம் இருந்தது. அங்கு காலை 10.00 மணிக்கு ஒரு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பிரேதத்தை சேகர் என்பவரிடம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். காலை 10.20 மணிக்கு எதிரி நிலத்திலிருந்து வெள்ளி அரைஞாண் கொடியை சாட்சிகள் ஆண்டி, தனஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்ற ( சாட்சி மீண்டும் சாட்சியம் அளிக்க மிகவும் சிரமப்பட்டதால், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தற்போது உள்ள விசாரணை அதிகாரி உதவியுடன் வழக்கு நாட்குறிப்பை வைத்து சாட்சியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்க அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது ).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.